1984 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, மத்திய அரசிடம் கேட்கப்பட்ட தொகை சரியானதுதான். ரூ. 45 கோடி அவர்கள் கொடுத்தார்கள். ரூ. 45 கோடி தரப் பட்டத்தில் மானியமாகக் கொடுக்கப்பட்டது ரூ. 13.7 கோடி. மத்திய அரசு கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நான் முதலில் தெரிவித்தபடி இன்று ரூ. 114.8 கோடி செலவு செய்திருக்கிறோம். எடுக்கப்பட்ட வேலைகள் பூர்த்தியாகியுள்ளன. மொத்தம் எடுக்கப்பட்ட வேலைகள் 82,459. அவை பூர்த்தியாகி யிருக்கின்றன. எங்கேயாவது வேலைகள் எடுக்கப்பட்டு முடி வடையவில்லையென்றால், அதை என் கவனத்திற்குக் கொண்டு வந்தால் முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பேன்.

தமிழ்நாட்டில் முந்திரி விளைச்சலின் அபிவிருத்திக்கான அரசின் திட்டம்.

47 (*வினா எண் 18035) திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் முந்திரி பயிரிடுவதற்கு உலக வங்கி கடன் வழங்கியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இல்லை. உலக வங்கியின் உதவியுடன் சுமார் ரூ. 3950.46 இலட்சம் மதிப்பீட்டில் முந்திரி அபிவிருத்திக்கான திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த வினாவிற்கும் பதிலளித்து விடுங்கள்.

48 (*வினா எண் 20533) திரு. செ. செம்மலை: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் முந்திரி விளைச்சலின் அபிவிருத்திக்கு ஏதேனும் புதிய திட்டத்தை அரசு மேற்கொள்ள உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இந்தக் கேள்விக்கும் அதே பதில்தான்.

(முற்பகல் 9-40)

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் முந்திரி பயிரிடுவதற்காக உலக வங்கியின் மூலம் பெறப்பட்ட கடன், எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு தொகை மாவட்ட வாரியாக செலவழிக்கப்பட் டுள்ளது என்பதையும், எந்த அளவிற்கு மாவட்டங்களில் முந்திரி பயிரிடப்பட்டுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.